முழுப் பதிப்புரிமையுடையது.

# இலங்கை கணக்கீட்டுத் தொழினுட்பவியலாளர் கழகம்

## மட்டம் I பரீட்சை – 2020 யூலை

## (101) நிதிக் கணக்கீடு

(Financial Accounting)

26-09-2020
காலை
[9.00 – 12.00]

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்** (தயவுசெய்து கவனமாக வாசிக்கவும்)**:**

(1) ***நேரம்:*** *03 மணித்தியாலம்*

பக்கங்களின் எண்ணிக்கை : 11
வினாக்களின் எண்ணிக்கை : 06

(2) ***எல்லா வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.***

(3) *உங்களுக்குத் தரப்பட்டுள்ள* ***விடைப்புத்தகத்தில்*** *நீங்கள் விண்ணப்பித்த அதே* ***ஒரு மொழியிலேயே விடையளித்தல்*** *வேண்டும்.*

(4) *சகல செய்முறைகளையும் கணிப்புகளையும் சமர்ப்பிக்கவும். நீங்கள் மேற்கொண்ட எடுகோள்கள் ஏதாவது இருப்பின் அவற்றைத் தெளிவாகக் குறிப்பிடவும்.*

(5) *நிரற்படுத்தப்படாத கணிப்பான்களின் பாவனை* ***மாத்திரம்*** *அனுமதிக்கப்பட்டுள்ளது.*

(6) *வரைவிலக்கணங்களுடன்கூடிய* ***செயல் வினைச்சொல் பட்டியல்*** *இணைக்கப்பட்டுள்ளது. OTQs தவிர்ந்த ஏனைய ஒவ்வொரு வினாவும் ஒரு* ***வினைச்சொல்லைக்*** *கொண்டிருக்கிறது. பரீட்சார்த்திகள் செயல் வினைச்சொல் பட்டியலில் தரப்பட்ட வினைச்சொல்* ***வரைவிலக்கணத்தின்*** *அடிப்படையில் வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.*

(7) *100 புள்ளிகள்.*

---

## பகுதி A

(மொத்தம் 40 புள்ளிகள்)

### வினா 01

*இல.* ***1.1*** *இலிருந்து* ***1.10*** *வரையிலான வினாக்களுக்கு மிகச் சரியான விடையினைத் தெரிவு செய்க. தெரிவு செய்த விடையின் இலக்கத்தினை உமது விடைப்புத்தகத்தில் வினாவுக்குரிய இலக்கத்துடன் எழுதுக.*

**1.1** பின்வருவனவற்றுள் வருமானக் கூற்றின் ஒரு கூறாக (element) அமைவது எது?

(1) சொத்துக்கள் (2) உரிமையாண்மை (3) வருமானம் (4) பரிப்புக்கள்

**1.2** பின்வருவனவற்றுள் சரியான கூற்றைத் தெரிவுசெய்க:

(1) தொடர்புடைமை (relevance) என்பது நிதித் தகவலின் அடிப்படைத் தரரீதியிலான பண்பு ஒன்றாகும்.

(2) ஊடுசெயல்கள் கணக்கீட்டின் வெளியீடாகக் கருதப்படுகின்றன.

(3) கணக்கீட்டின் பிரதான நோக்கமாக அமைவது நிறுவனத்தின் ஊழியர்களைப் பாதுகாத்தல் ஆகும்.

(4) நிதித் தகவல்களுக்கு எவ்வித வரையறைகளும் இல்லை.

**1.3** "*வணிகம் மற்றும் உரிமையாளர்களை இரு தனித்தனியான சுயாதீனமான உரிமங்களாகக் கருதி ஊடுசெயல்கள் ஏற்பிசைவு செய்யப்படுகின்றன*":

மேற்கூறிய கூற்றை விளக்கும் கணக்கீட்டு எண்ணக்கருவாக அமைவது பின்வருவனவற்றுள் எது?

(1) உரிம எண்ணக்கரு (Entity concept)

(2) தொடர்ந்தியங்கும் எண்ணக்கரு (Going Concern concept)

(3) மாறாமை எண்ணக்கரு (Consistency concept)

(4) முன்னெச்சரிக்கை எண்ணக்கரு (Prudence concept)

**1.4** பின்வருவனவற்றுள் உரிமமொன்றின் நாட்டதாரராக (stakeholder) அமைபவர் யார்?

(1) ஊழியர்கள் (2) அரசாங்கம்

(3) முகாமையாளர்கள் (4) மேற்கூறிய யாவரும்.

**1.5** வணிகத்தின் ஊழியரான **சுதத்** என்பவருக்கு வணிகமானது ஊழியருக்கான கடனொன்றை காசாக வழங்கியுள்ளது. இந்த ஊடுசெயலைப் பதிவுசெய்வதற்கான சரியான இரட்டைப் பதிவாக அமைவது:

(1) காசுக் கணக்கு வரவு மற்றும் ஊழியர் கடன் கணக்கு செலவு

(2) காசுக் கணக்கு வரவு மற்றும் சம்பளக் கணக்கு செலவு

(3) சம்பளக் கணக்கு வரவு மற்றும் ஊழியர் கடன் கணக்கு செலவு

(4) ஊழியர் கடன் கணக்கு வரவு மற்றும் காசுக் கணக்கு செலவு

**1.6** தனியுடமை வியாபாரமான **ருவான் டிரேடர்ஸின்** பதிவுகளிலிருந்து 2020 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காகப் பிரித்தெடுக்கப்பட்ட தகவல்கள் கீழ்வருமாறு:

| | **ரூபா** |
|---|---|
| 2020 மார்ச் 31 இலான மொத்தச் சொத்துக்கள் | 1,550,000 |
| 2020 மார்ச் 31 இலான பரிப்புக்கள் | 750,000 |
| 2019 ஏப்ரல் 01 இலான மூலதனக் கணக்கு | 280,000 |
| ஆண்டின்போதான எடுப்பனவுகள் | 150,000 |

2020 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான வியாபாரத்தின் இலாபமாக அமைவது:

(1) ரூபா 670,000/- (2) ரூபா 800,000/- (3) ரூபா 370,000/- (4) ரூபா 930,000/-

**1.7** வணிகத்தின் உரிமையாளர் தனது தனிப்பட்ட மோட்டார் வானை வணிகத்திற்கு மாற்றும்போது கணக்கீட்டுச் சமன்பாட்டின் மீதான தாக்கத்தைச் சரியாகக் காட்டுவது பின்வருவனவற்றுள் எது?

(1) உரிமையாண்மையில் அதிகரிப்பு மற்றும் சொத்துக்களில் குறைவு

(2) சொத்துக்களில் அதிகரிப்பு மற்றும் உரிமையாண்மையில் குறைவு

(3) பரிப்பில் அதிகரிப்பு மற்றும் உரிமையாண்மையில் குறைவு

(4) சொத்துக்களில் அதிகரிப்பு மற்றும் உரிமையாண்மையில் அதிகரிப்பு

**1.8** களஞ்சியத்தினால் பொருட்களின் பெறுவனவைப் பதிவு செய்வதற்காகப் பயன்படுத்தப்படும் ஆவணமாக அமைவது:

(1) கொள்வனவுக் கட்டளை (PO)

(2) கொள்வனவுக் கோரிக்கைச் சீட்டு (PRN)

(3) பொருள் பெறுகைச் சீட்டு (GRN)

(4) மூலப்பொருள் கோரிக்கைச் சீட்டு (MRN)

**1.9** "COVID-19" நோய்ப் பரவல் காரணமாக காபண் தடப்பதிவு மட்டம் அல்லது காபனீரொட்சைட்டு வெளியீட்டு மட்டமானது உலகளாவிய ரீதியில் குறைவடைந்துள்ளது. காபண் தடப்பதிவு எண்ணக்கருவானது PESTEL இல் உரித்துடையதாக அமைவது:

(1) தொழினுட்பக் காரணி

(2) சூழற் காரணி

(3) பொருளாதாரக் காரணி

(4) சமூகக் காரணி

**1.10**

| சொத்துக்கள் | = | உரிமையாண்மை | + | பரிப்பு |
|---|---|---|---|---|
| 200,000 | = | 200,000 | + | - |

மேற்கூறிய கணக்கீட்டுச் சமன்பாட்டிற்கான மிகவும் சரியான ஊடுசெயலாக அமைவது பின்வருவனவற்றுள் எது?

(1) உரிமையாளர் தனது தனிப்பட்ட தேவைக்காக ரூபா 200,000/- பெறுமதியான பொருட்களை எடுத்துக்கொள்ளல்

(2) வணிகத்தின் மின்சாரப் பட்டியலான ரூபா 200,000/- ஐ உரிமையாளர் செலுத்துதல்

(3) உரிமையாளர் வணிகத்திற்கு ரூபா 200,000/- மேலதிக காசு ஈடுபடுத்தல்

(4) ரூபா 200,000/- பெறுமதியான பொருட்கள் மீள்விற்பனை நோக்கில் கடனடிப்படையில் கொள்வனவு செய்யப்படல்

*கீழே **1.11** தொடக்கம் **1.15** வரையில் தரப்பட்டுள்ள ஒவ்வொரு கூற்றும் **சரியானதா** அல்லது **தவறானதா** எனக் குறிப்பிடுக. உமது விடையை உரிய வினா இலக்கத்துடன் விடைப்புத்தகத்தில் (சரியானது / தவறானது) குறிப்பிடுக.*

**1.11** கடந்தகால நிகழ்வுகளின் விளைவாக நிறுவனத்தின் பொருளாதார வளமொன்றை மாற்றம் செய்வதற்கான தற்போதைய கடப்பாடு பொறுப்பு (பரிப்பு) எனப்படும்.

**1.12** பொருண்மை எணணக்கருவின் பிரகாரம், தொக்குகளானவை கிரயம் அல்லது தேறிய நிகரப் பெறுமதியின் குறைந்த பெறுமதியில் பதிவு செய்யப்படுகின்றன.

**1.13** வணிகமொன்றின் உரிமையாண்மை பெறுமதியானது மொத்தச் சொத்துக்களின் பெறுமதியிலிருந்து அதன் மொத்தப் பரிப்புக்களின் பெறுமதியைக் கழிப்பதன் மூலம் கணிக்கப்படும்.

**1.14** அட்டுறு எண்ணக்கருவின் பிரகாரம், வருமானமானது பெறுவனவுகள் காசாகப் பெறப்பட்டதோ அல்லது இல்லையோ, குறிப்பிட்ட கணக்கீட்டுக் காலப்பகுதிக்கு ஏற்பிசைவு செய்யப்படும்.

**1.15** வங்கிக் கணக்கிணக்கம் என்பது வணிக உரிமத்தின் வங்கியினால் தயாரிக்கப்படுகின்ற ஒரு கூற்றாகும்.

***1.16** தொடக்கம் **1.20** வரையுள்ள வினாக்களுக்கான விடைகளை உங்களது விடைப்புத்தகத்திலே உரிய வினா இலக்கத்திற்கு எதிரே எழுதுக.*

**1.16** **நிமல்சிறி ஹாட்வெயார்** 2018 ஏப்ரல் 01 இல் ரூபா 400,000/- இற்கு இயந்திரமொன்றைக் கொள்வனவு செய்தது. இயந்திரத்தை குறைந்துசெல்லும் மீதி முறையில் பெறுமானத் தேய்விடுவது உரிமத்தின் கொள்கையாக இருக்கிறது.

பொருத்தமான பெறுமானத்தேய்வு வீதம் ஆண்டிற்கு 25% எனின், 2020 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான பெறுமானத்தேய்வுக் கட்டணத்தைக் கணிக்குக.

**1.17** "மாறாமை எண்ணக்கரு (Consistency Concept)" இனைச் சுருக்கமாக விபரிக்குக.

**1.18** பொது நாட்குறிப்பேட்டில் பதியப்படுகின்ற இரண்டு (02) வகையான ஊடுசெயல்களைக் குறிப்பிடுக.

**1.19** நடைமுறைச் சொத்துக்களுக்கான இரண்டு (02) உதாரணங்களைக் குறிப்பிடுக.

**1.20** கீழ்வரும் தகவல்கள் 2020 மார்ச் மாதத்திற்கான **சத்துர டிரேடர்ஸின்** கணக்கேடுகளிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டவையாகும் :

| | **ரூபா** |
|---|---:|
| 2020 மார்ச் 01 இலான கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதி | 875,000 |
| மார்ச் மாதத்திற்கான கொள்வனவு நாட்குறிப்பேட்டின் மொத்தம் | 2,350,000 |
| மார்ச் மாதத்திற்கான விற்பனை நாட்குறிப்பேட்டின் மொத்தம் | 3,450,000 |
| மார்ச் மாதத்திற்கான வெளித்திரும்பல் நாட்குறிப்பேட்டின் மொத்தம் | 575,000 |
| மார்ச் மாதக் காலப்பகுதியில் கடன்கொடுத்தோருக்கான கொடுப்பனவுகள் | 1,450,000 |

மேற்கூறிய தகவல்களைக் கருத்திற்கொண்டு,

2020 மார்ச் 31 இலான கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதியினைக் கணிக்குக.

(02 புள்ளி வீதம், மொத்தம் 40 புள்ளிகள்)

*பகுதி A முடிவு*

## பகுதி B

(மொத்தம் 40 புள்ளிகள்)

### வினா 02

**சமனல ஸ்ரோர்ஸ், சமனல** என்பவருக்குச் சொந்தமான தனியுடமை வியாபாரமாகும். 2020 மார்ச் 31 இலான **சமனல ஸ்ரோர்ஸின்** பரீட்சை மீதியானது இணங்கவில்லை என்பதுடன் ரூபா 49,500/- வித்தியாசமானது தொங்கற் கணக்கில் வரவுப் பதிவு செய்யப்பட்டது. பின்னர் வரைவு நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டதுடன் 2020 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான வரைவு நிதிக் கூற்றுக்களின்படி, ரூபா 1,350,000/- நிகர இலாபமாகப் பதிவு செய்யப்பட்டது.

பின்னர் பின்வரும் வழுக்கள் இனங்காணப்பட்டன:

(1) 2020 மார்ச் 31 இல் ரூபா 95,000/- கிரயத்தில் கடனடிப்படையில் கணினி ஒன்று கொள்வனவு செய்யப்பட்டதுடன் அது கணினிக் கணக்கில் ரூபா 9,500/- ஆக வரவு வைக்கப்பட்டிருந்தது. ஆயினும் செலவுப் பதிவானது உரிய கடன்கொடுத்தோர் கணக்கில் சரியாகப் பதிவு செய்யப் பட்டிருந்தது.

(2) ரூபா 76,000/- காசு கொள்வனவானது காசேட்டில் சரியாகச் செலவு வைக்கப்பட்டது. ஆயினும் உரிய வரவுப் பதிவானது இன்னும் பதிவு செய்யப்படவில்லை.

(3) 2020 மார்ச் 31 இல் ஏற்பட்ட அலுவலகப் பராமரிப்புச் செலவினமான ரூபா 66,000/- அலுவலக உபகரணக் கணக்கில் வரவுப் பதிவு செய்யப்பட்ட அதே நேரம் இது காசேட்டில் சரியாகப் பதிவு செய்யப்பட்டிருந்தது.

(4) ரூபா 112,000/- மோட்டார் வாகனப் பெறுமானத் தேய்வானது இரு தடவை உரிய பெறுமானத் தேய்வுச் செலவினக் கணக்கில் வரவுப் பதிவு செய்யப்பட்டதுடன் செலவுப் பதிவானது உரிய பேரேட்டுக் கணக்கில் சரியாகப் பதிவு செய்யப்பட்டது.

(5) விற்பனை நாட்குறிப்பேட்டின் மொத்தமானது ரூபா 225,000/- ஆல் குறைத்துப் பதியப்பட்டிருந்தது.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

(a) மேற்கூறிய வழுக்களைத் திருத்துவதற்கான நாட்குறிப்பேட்டுப் பதிவுகளைத் **தயாரிக்குக.** (05 புள்ளிகள்)

(b) தொங்கற் கணக்கினைத் **தயாரிக்குக.** (02 புள்ளிகள்)

(c) 2020 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செம்மையாக்கப்பட்ட/திருத்தப்பட்ட நிகர இலாபத்தைக் **கணிக்குக.** (03 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 03

**நாணயக்கார** ரூபா 1,500,000/- வைப்பினை வங்கிக் கணக்கில் ஆரம்ப மூலதனமாக காசாக இட்டதுடன் மோட்டார் லொறியையும் முதலீடுசெய்து 2019 ஏப்ரல் 01 இல் தனியுடமை வியாபாரத்தை ஆரம்பித்தார்.

வியாபாரத்தின் பொது நாட்குறிப்பேட்டிலிருந்து பிரித்தறியப்பட்ட நாட்குறிப்புப் பதிவுகள் கீழ்வருமாறு:

*(ரூபா)*

| | **வரவு** | **செலவு** |
|---|---|---|
| மோட்டார் லொறி | 1,740,000 | |
| மூலதனக் கணக்கு | | 1,740,000 |
| **2019 ஏப்ரல் 01 இல் உரிமையாளரால் வியாபாரத்திற்கு மாற்றம் செய்யப்பட்ட மோட்டார் வாகனம்** | **1,740,000** | **1,740,000** |

2020 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கு (காசேடு) கீழ்வருமாறு:

| | **ரூபா** | | **ரூபா** |
|---|---|---|---|
| மூலதனம் | 1,500,000 | கடன்கொடுத்தோருக்கான கொடுப்பனவுகள் | 3,850,000 |
| வியாபாரக் கடன்பட்டோரிடமிருந்தான பெறுவனவுகள் | 3,200,000 | வாடகை | 864,000 |
| காசு விற்பனை | 4,118,000 | மின்சாரம் மற்றும் நீர் | 258,000 |
| | | சம்பளங்களும் கூலிகளும் | 1,810,000 |
| | | மீதி கொ/செ | 2,036,000 |
| | **8,818,000** | | **8,818,000** |

பின்வரும் மேலதிகத் தகவல்களும் தரப்பட்டுள்ளன:

(1) 2020 மார்ச் 31 இலான கணக்கேடுகளில் காணப்பட்ட மீதிகள் பின்வருமாறு:

| | ரூபா |
|---|---|
| வியாபாரக் கடன்பட்டோர் | 975,000 |
| வியாபாரக் கடன்கொடுத்தோர் | 1,240,000 |
| செலுத்த வேண்டிய மின்சாரம் மற்றும் நீர்க் கட்டணங்கள் | 15,000 |

(2) மோட்டார் லொறியானது கிரயத்தில், நேர்கோட்டு அடிப்படையில் ஆண்டிற்கு 20 % இல் பெறுமானத் தேய்விடப்படுகின்றது.

(3) 2020 மே 31 இல் முடிவடையும் 12 மாத காலப்பகுதிக்கான வாடகையானது 2019 யூன் 01 இல் செலுத்தப்பட்டது.

(4) 2020 மார்ச் 31 இல் எவ்வித இருப்புகளும் காணப்படவில்லை.

**நீங்கள் செய்யவேண்டியது :**

2020 மார்ச் 31 இலான **நாணயக்கார** வியாபாரத்தின் பரீட்சை மீதியைத் **தயாரிக்குக.** (10 புள்ளிகள்)

## வினா 04

பின்வரும் தகவல்கள் பாடசாலைப் பைகளை உற்பத்தி செய்யும் **BMI** நிறுவனத்தின் 2020 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்குரியவையாகும் :

| விபரம் | ரூபா |
|---|---|
| 2019 ஏப்ரல் 01 இல் தொக்கு: | |
| மூலப்பொருள் | 810,000 |
| புத்துருவாகும் வேலை (முதன்மைக் கிரயத்தில்) | 445,000 |
| மூலப்பொருட் கொள்வனவு | 2,850,000 |
| மின்சாரச் செலவினம் | 275,000 |
| நீர்ச் செலவினம் | 200,000 |
| தொழிற்சாலை வாடகை | 225,000 |
| காப்புறுதிச் செலவினம் | 300,000 |
| நேர் கூலிகள் | 1,270,000 |
| தொழிற்சாலை இயந்திர எரிபொருள் | 130,000 |
| தொழிற்சாலை முகாமையாளர் சம்பளம் | 860,000 |
| தொழிற்சாலை இயந்திர பெறுமானத்தேய்வு | 270,000 |

கீழ்வரும் மேலதிகத் தகவல்களும் தரப்பட்டுள்ளன :

(1) 2020 மார்ச் 31 இல் மதிப்பிடப்பட்ட தொக்குகள் கீழ்வருமாறு :

| விபரம் | கிரயம் (ரூபா) |
|---|---|
| மூலப்பொருள் | 900,000 |
| புத்துருவாகும் வேலை (முதன்மைக் கிரயத்தில் மதிப்பிடப்பட்டது) | 690,000 |

(2) தொழிற்சாலை மற்றும் அலுவலகத்திற்கிடையில் ஒதுக்கப்பட வேண்டிய செலவினங்கள் கீழ்வருமாறு:

| செலவினம் | தொழிற்சாலை | அலுவலகம் |
|---|---|---|
| மின்சாரம் | 80% | 20% |
| நீர் | 75% | 25% |
| காப்புறுதி | 90% | 10% |

(3) பூர்த்தி செய்யப்பட்ட பாடசாலைப் பைகள் வியாபாரப் பிரிவுக்கு கிரயத்தில் 20% இலாப எல்லை வைத்து (profit margin) மாற்றப்படுகின்றன.

**நீங்கள் செய்யவேண்டியது :**

2020 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான **BMI** இன் உற்பத்திக் கணக்கினைத் **தயாரிக்குக.**

(10 புள்ளிகள்)

## வினா 05

(A) 2020 மார்ச் மாதத்திற்கான தனியுடமை வியாபாரமான **சாம் டிரேடர்ஸின்** ஏடுகளிலிருந்து பின்வரும் ஊடுசெயல்கள் பிரித்தெடுக்கப்பட்டன:

| திகதி | ஊடுசெயல் |
|---|---|
| 2020.03.02 | மீள்விற்பனை நோக்கில் ரூபா 450,000/- பெறுமதியான பொருட்கள் கடனடிப்படையில் கொள்வனவு செய்யப்பட்டன. |
| 2020.03.05 | ரூபா 390,000/- கிரயமான பொருட்கள் கடனடிப்படையில் ரூபா 445,000/- இற்கு விற்பனை செய்யப்பட்டன. |
| 2020.03.10 | **சாம்** ரூபா 38,500/- கிரயமான பொருட்களைத் தனது தனிப்பட்ட பாவனைக்காக எடுத்துக்கொண்டார். |
| 2020.03.15 | ஊழியர் சம்பளமாக ரூபா 25,000/- செலுத்தப்பட்டது. |
| 2020.03.15 | வங்கி ஒன்றின் நிலையான வைப்பில் ரூபா 200,000/- முதலீடு செய்யப்பட்டது. |

**நீங்கள் செய்யவேண்டியது :**

மேற்கூறிய ஊடுசெயல்களின் தாக்கத்தைப் பின்வரும் கணக்கீட்டுச் சமன்பாட்டில் **பதிவுசெய்க.**

*[தொக்கு + கடன்பட்டோர் + நிலையான வைப்பு + காசு = உரிமையாண்மை + பரிப்புக்கள்]*

(05 புள்ளிகள்)

(B) ***ரணசிங்க அன்ட கோ*** கம்பனியின் 2020 மார்ச் 31 இலான வங்கிக் கூற்றின்படியான வங்கி மீதியானது சாதகமான (வரவு) காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கு (காசேடு) மீதியான ரூபா 155,000/- உடன் இணங்கவில்லை.

பின்வரும் காரணங்கள் பின்னர் இனங்காணப்பட்டன:

(1) வங்கியானது நிலையியற் கட்டளை அறிவுறுத்தல்களுக்கு அமைய ரூபா 75,000/- இனை வங்கிக் கணக்கிலிருந்து கழித்துக் கொண்டதுடன் இது காசேட்டில் பதிவு செய்யப்படவில்லை.

(2) வாடிக்கையாளர் ஒருவரிடமிருந்து வங்கிக்குப் பெறப்பட்ட நேரடி வைப்பான ரூபா 30,000/- ஆனது காசேட்டில் பதிவு செய்யப்படவில்லை.

(3) ***ரணசிங்க அன்ட கோ*** கம்பனியால் 2020 மார்ச் 29 இல் ரூபா 195,000/- பெறுமதியான காசோலையானது வழங்கப்பட்டது. ஆயினும் இது 2020 மார்ச் 31 இல் கொடுப்பனவுக்காக இன்னும் சமர்ப்பிக்கப் படவில்லை.

(4) ***ரணசிங்க அன்ட கோ*** கம்பனியால் 2020 மார்ச் 30 இல் வங்கியில் வைப்புச் செய்யப்பட்ட ரூபா 65,000/- காசோலையானது 2020 மார்ச் 31 இல் தேறாது இருந்தது.

(5) ரூபா 1,500/- வங்கிக் கட்டணமானது காசேட்டில் பதிவு செய்யப்படவில்லை.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

(a) செம்மையாக்கம் செய்யப்பட்ட காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கினைத் (காசேட்டைத்) **தயாரிக்குக.** (03 புள்ளிகள்)

(b) 2020 மார்ச் 31 இலான வங்கிக் கூற்றில் காணப்படும் மீதியினை **இனங்காண்க.** (02 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

*பகுதி B முடிவு*

# பகுதி C

(மொத்தம் 20 புள்ளிகள்)

## வினா 06

**கோல்டன் டெக்** என்பது **கருணாதிலக** என்பவருக்குச் சொந்தமான தனியுடமை வியாபாரமாகும். **கோல்டன் டெக்கின்** 2020 மார்ச் 31 இலான பரீட்சை மீதி கீழ்வருமாறு:

**கோல்டன் டெக்**

**2020 மார்ச் 31 இலான பரீட்சை மீதி** *(ரூபா '000)*

| விபரம் | வரவு | செலவு |
|---|---|---|
| ஆதனம், பொறி மற்றும் உபகரணம் - கிரயத்தில் : | | |
| காணி | 3,000 | |
| கட்டடம் | 3,500 | |
| மோட்டார் வாகனம் | 2,700 | |
| 2019 ஏப்ரல் 01 இலான திரள் தேய்மானம் : | | |
| கட்டடம் | | 620 |
| மோட்டார் வாகனம் | | 440 |
| 2019 ஏப்ரல் 01 இலான தொக்கு | 6,200 | |
| கொள்வனவுகள் | 18,250 | |
| விற்பனைகள் | | 33,900 |
| 2019 ஏப்ரல் 01 இலான ஐயக்கடன் ஏற்பாடு | | 200 |
| 2019 ஏப்ரல் 01 இலான மூலதனக் கணக்கு | | 9,450 |
| வங்கிக் கடன் | | 2,500 |
| மின்சாரச் செலவினம் | 3,200 | |
| நீர்ச் செலவினம் | 450 | |
| வியாபார வருமதிகள் | 3,850 | |
| வியாபார சென்மதிகள் | | 2,600 |
| சம்பளங்களும் கூலிகளும் | 5,550 | |
| பயணச் செலவுகள் | 290 | |
| கையிலுள்ள காசும் வங்கி மீதியும் | 1,100 | |
| காப்புறுதிச் செலவினம் | 1,200 | |
| விளம்பரப்படுத்தல் செலவினம் | 100 | |
| எடுப்பனவுகள் | 320 | |
| | **49,710** | **49,710** |

கீழ்வரும் மேலதிகத் தகவல்களும் தரப்பட்டுள்ளன :

(1) 2020 மார்ச் 31 இல் கிரயத்தில் மதிப்பிடப்பட்ட இறுதித் தொக்கின் பெறுமதி ரூபா 3,800,000/- ஆகும்.

(2) ரூபா 600,000/- கிரயமான தளபாடமானது கடனடிப்படையில் **வரையறுக்கப்பட்ட X நிறுவனத்திடமிருந்து** 2019 அக்டோபர் 01 இல் கொள்வனவு செய்யப்பட்டதுடன் இது கணக்கேடுகளில் பதிவு செய்யப்படவில்லை. வியாபாரத்தின் கொள்கையானது கிரயத்தில் நேர்கோட்டு அடிப்படையின்மீது கீழ்வரும் வீதங்களில் தேய்மானம் செய்வதாகும் :

கட்டடங்கள் : ஆண்டிற்கு 5%

மோட்டார் வாகனங்கள் : ஆண்டிற்கு 20%

தளபாடங்கள் : ஆண்டிற்கு 25%

(3) பின்வரும் வியாபார வருமதி மீதிகளை அறவிட முடியாக் கடனாகப் பதிவழிப்புச் செய்வதற்கு முகாமை தீர்மானித்திருந்தது :

| | ரூபா |
|---|---|
| **பிரசன்னா** | 150,000 |
| **சமந்தா அசோசியேற்ஸ்** | 200,000 |
| **DKW அன்ட் கம்பனி** | 500,000 |
| | **850,000** |

இவற்றுக்கு மேலதிகமாக, மேலேயுள்ள மீதிகளை பதிவழிப்புச் செய்ததன் பின்னர், 2020 மார்ச் 31 இல் உள்ள வியாபார வருமதிகள் மீதிகள்மீது ஐயக் கடன்களுக்காக 10% பொது ஏற்பாடு செய்யப்பட வேண்டும்.

(4) 2020 மார்ச் மாதத்திற்காகச் செலுத்த வேண்டிய கட்டணச் சிட்டைகள் (bills) கீழ்வருமாறு :

மின்சாரம் : ரூபா 350, 000/-

நீர் : ரூபா 80, 000/-

(5) 12 % வருடாந்த வட்டி வீதத்தில் ரூபா 2,500,000/- வங்கிக் கடனானது 2020 மார்ச் 01 இல் பெற்றுக்கொள்ளப்பட்டது. கடனுக்கான முதலாவது தவணைக் கட்டணம் 2020 ஏப்ரல் 01 இல் செலுத்தப்பட வேண்டும். 2020 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காகச் செலுத்தப்பட வேண்டிய வட்டியானது கணக்கேடுகளில் கணக்கிற் கொள்ளப்படவில்லை.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

பின்வருவனவற்றைத் **தயாரிக்குக** :

(a) 2020 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான முற்றடக்க வருமானக் கூற்று (11 புள்ளிகள்)

(b) 2020 மார்ச் 31 இலான நிதி நிலைக் கூற்று (09 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

*பகுதி C முடிவு*

# செயல் வினைச்சொல் பட்டியல்

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **அறிவு (1)** | விடயங்களையும் அடிப்படை எண்ணக் கருக்களையும் ஞாபகப்படுத்தல் | **வரைக (Draw)** | வரைபடம் அல்லது வரிப்படமொன்றைச் சமர்ப்பித்தல் |
| | | **தொடர்புபடுத்துக (Relate)** | தர்க்கரீதியாக அல்லது காரணரீதியாக தொடர்புகளைத் தாபித்தல் |
| | | **கூறுக/ குறிப்பிடுக(State)** | திட்டவட்டமாக அல்லது தெளிவாக விபரங்களை வெளிப்படுத்தல் |
| | | **அடையாளங்காண்க / இனங்காண்க (Identify)** | கருத்திற்கொண்ட பின்னர் ஏற்பிசைவு செய்தல், தாபித்தல் அல்லது தெரிவுசெய்தல் |
| | | **நிரற்படுத்துக / பட்டியலிடுக (List)** | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றன்கீழ் ஒன்றாக எழுதுதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **முற்றடக்கம் (2)** | யோசனைகள் மற்றும் தகவல்களை விபரித்தலும் தெளிவுபடுத்தலும் | **ஏற்பிசைவு செய்க (Recognize)** | அறிவு அல்லது சூழ்நிலை அனுபவத்தைப் பயன்படுத்தி செல்லுபடித்தன்மையை அல்லது அதன் இயலாமையைக் காட்டுதல் |
| | | **பொருள் விளக்குக / கருத்துக்கூறுக(Interpret)** | விளங்கக்கூடிய அல்லது பரிச்சயமான பதங்களில் தெளிவுபடுத்தல் |
| | | **விளக்குக (Describe)** | பிரதான அம்சங்களை எழுதுதலும் தொடர்பாடுதலும் |
| | | **விபரிக்குக (Explain)** | உரிய விடயங்களைப் பயன்படுத்தி தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | | **பொருள் வரையறை செய்க / வரைவிலக்கணப்படுத்துக(Define)** | சரியான தன்மை, நோக்கு அல்லது பொருளைத் தருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **பிரயோகம் (3)** | புதிய சூழ்நிலைகளில் அறிவைப் பயன்படுத்தலும் பின்பற்றலும் | **கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க(Reconcile)** | வேறொன்றுடன் ஒத்திருப்பதை / பொருந்தியிருப்பதை ஒப்புவித்தல் |
| | | **வரைக (Graph)** | வரைபுகள் மூலம் குறித்துக்காட்டுதல் |
| | | **மதிப்பிடுக (Assess)** | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | | **தீர்க்குக (Solve)** | கணிப்பீடுகள் அல்லது விளக்கங்கள் ஊடாக தீர்வைக் கண்டுபிடித்தல் |
| | | **தயாரிக்குக (Prepare)** | குறித்த நோக்கத்திற்காக உரிய முறையில் தயார்படுத்தல் |
| | | **எடுத்துக்காட்டுடன் விவரிக்குக (Demonstrate)** | உதாரணங்களுடன் நிறுவுதல் அல்லது வெளிக்காட்டல் |
| | | **கணிக்குக / கணிப்பிடுக (Calculate)** | கணிதரீதியான கணிப்பீட்டுடன் கண்டறிதல் அல்லது கணித்தல் |
| | | **பிரயோகிக்குக (Apply)** | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டுவருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **பகுப்பாய்வு (4)** | யோசனைகளுக் கிடையிலான தொடர்புகளை எழுதுதலும் பிரசினங்களைத் தீர்த்தலும் | **தொடர்பாடுக(Communicate)** | தகவல்களைப் பகிர்தல் அல்லது பரிமாறுதல் |
| | | **சுருக்கமாகக் குறிப்பிடுக(Outline)** | முக்கிய அம்சங்களின் தொகுப்பினைத் தருதல் |
| | | **வேறுபடுத்துக (Contrast)** | வேறுபாடுகளைக் காட்டுவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | **ஒப்பிடுக (Compare)** | ஒற்றுமைகளை அறிவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | **கலந்தாய்வு செய்க / ஆராய்க (Discuss)** | விவாதிப்புகள் மூலம் விபரமாக ஆய்வுசெய்தல் |
| | | **வித்தியாசப்படுத்துக / வகையிடுக (Differentiate)** | சிலவற்றை வேறுபடுத்துகின்ற வித்தியாசங்களைக் காட்டுதல் |
| | | **பகுப்பாய்வு செய்க (Analyze)** | தீர்வினை அல்லது பேறினை கண்டுபிடிப்பதற்காக விபரமாக ஆய்வுசெய்தல் |